DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF, NANGUNERI

| | | |
|---|---|---|
| **Original Suit No** | : | **O.S. 31/ 2025** |
| **Deposition of witness for** | : | **Plaintiff** |
| **Serial No. of Witness** | : | **PW1** |
| **Name** | : | **தாமஸ்** |
| **Father's Name** | : | பாக்கியநாதன் சேசுதாஸன் |
| **Village** | : | சங்கரன்குடியிருப்பு |
| **Taluk** | : | சாத்தான்குளம் |
| **Age** | : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of day of 10.10.2025

**சாட்சி சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை.**

நான் இவ்வழக்கின் 3 ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1 வது சாட்சி ஆவேன். எனது முதல்விசாரணை வாக்குமூலத்தை எழுத்துமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டுள்ளது. 20.12.1967 தேதி யில் சாத்தான்குளம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 4068/1967 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 1**. 13.11.1969 சாத்தான்குளம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 2887/1969 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 2**. 10.03.2014 தேதியில் வாதியின் தகப்பனார் வாதிகளுக்கு ஏற்படுத்தி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவண எண் 295/2014 அசல் **வா.சா.ஆ 3**. இட்டமொழி கிராமம் கூட்டு பட்டா எண் 1359 கணினி நகல் **வா.சா.ஆ 4**. 20.10.1997 ம் தேதியில் மகாலிங்கம் தனது மகள் ராஜபூபதி அம்மாளுக்கு ஏற்படுத்தி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவண எண் 735/1997 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 5**. 07.03.2024 ம் தேதியில் ராஜபூபதி அம்மாள் 2 ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்த செட்டில்மெண்ட் எண் 506/2024 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 6**. 22.04.2024 ம் தேதி 2 ம் பிரதிவாதி 1 ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்தி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவண எண் 841/2024 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 7**. இட்டமொழி கிராமம் பழைய FMB 03.04.2024 ம் தேதியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி நகல் **வா.சா.ஆ 8**. 22.05.2024 ம் தேதியில் 2 ம் வாதி திசையன்விளை வட்டாட்சியருக்கு அனுப்பிய பட்டா மாறுதல் ஆட்சேபனை மனு கைநகல் **வா.சா.ஆ 9**. 25.05.2024 ம் தேதியில் மேற்படி ஆட்சேபனை மனு திசையன்விளை வட்டாட்சியர் அலுவலகம்

பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ 10**. 15.08.2024 ம் தேதியில் திசையன்விளை வட்டாட்சியர் அலுவலகம் வழங்கிய பட்டா மாறுதல் **வா.சா.ஆ 11**. 1 ம் பிரதிவாதி பெயரில் வழங்கப்பட்ட தனிப்பட்டா எண் 2857 கணினி நகல் **வா.சா.ஆ 12**. இட்டமொழி கிராம புல எண் 302 FMB 08.10.2024 பதிவிறக்கம் செய்யப்பட்ட கணினி நகல் **வா.சா.ஆ 13**. தபசில் சொத்து தொடர்பான புகைப்படம் கணினி தட்டுடன் **வா.சா.ஆ 14**. (இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 65 B ன் சான்றிதழ் இல்லாமல் குறியீடு செய்யப்பட்டது) சொத்தின் அரசு வழிகாட்டி மதிப்பு கணினி நகல் **வா.சா.ஆ 15**. 25.01.1999 தேதியிட்ட சாத்தான்குளம் சார்பதிவாளர் அலுவலக கிரைய ஆவணம் 352/1999 சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 16**. ( அசல் தாக்கல் செய்யாத காரணத்தினால் பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன் வா.சா.ஆ 16 ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது.) பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.